


சென்னை ராஜா அண்ணாமலைபுரம், திருவாவடுதுறை டி.என். இராஜரத்தினம் கலையரங்கத்தில், நேற்று (16.07.2023) தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் (கலைப் பண்பாட்டு இயக்ககம்) சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடைபெற்ற கலைமாமணி முத்தரசி ரவியின் கலைக்கோயில் நாட்டியப் பள்ளியின் "முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சங்கத் தமிழ் இசை நாட்டிய நாடக நிகழ்ச்சியினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்ற உறுப்பினர் செயலாளர் திருமதி விஜயா தாயன்பன், மற்றும் சிதம்பரம் அகடாமி ஆப் பெர்பார்மிங் ஆர்ட்ஸ் நிறுவனர் திருமதி சித்ரா விஸ்வேஸ்வரன் ஆகியோர் உள்ளனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (16.07.2023) சென்னை, கிண்டி கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனையில் 2023-24 ஆம் ஆண்டிற்கான இளநிலை மருத்துவம் / பல் மருத்துவம் படிப்பில் சேருவதற்கான தகுதி பெற்ற மாணவ / மாணவியர்களின் தரவரிசைப் பட்டியலை வெளியிட்டார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சாந்திமலர், மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்கக தேர்வுக் குழு செயலாளர் மரு.முத்துச்செல்வன், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.பார்த்தசாரதி மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும்

# உதயநிதி ஸ்டாலினுக்கு எல்லையில் எழுச்சிமிகு வரவேற்பு!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை



திருவண்ணாமலை, ஜூலை 17-

திருவண்ணாமலை மாவட்டத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு, திருவண்ணாமலை எல்லையில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது என பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் வருமாறு:

இளைஞர் அணி 'இயக்கத்தின் புது ரத்தம்' என்பார் முத்தமிழறிஞர் கலைஞர். கழகத்தின் வளர்ச்சியும் வெற்றியும் வெறும் கழகத்திற்கானது மட்டுமல்ல, அது ஒட்டுமொத்த தமிழ்நாட்டிற்கான வெற்றி வாய்ப்புகள் மறுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, சிறுபான்மை மக்களுக்கான வெற்றி என அடுத்த கட்டத்திற்கு இளைஞர் அணியை, தந்தைபெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வழியில், இளைஞர் அணியை வழி நடத்திடும், கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள், திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தருகிறார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் நாளை (18.07.2023 செவ்வாய்) கழகக் கொடியேற்று விழா, முத்தமிழறிஞர் கலைஞர் சிலை திறப்பு விழா, அரசு விழாக்களான ஜவ்வாது மலை கோடை விழா மற்றும் புதிய கட்டிடங்கள் திறப்பு விழா, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பல்வேறுதுறைகளின் ஆய்வுக்கூட்டம், நெடுஞ்சாலைத்துறை சார்பில் அமைக்கப்பட்ட அருணை மாநகரின் அடையாளமாக காளை சின்னத்துடன் கூடிய ரவுண்டான திறப்பு விழா, சமூக வலைதள செயற்பாட்டாளர்கள் ஆலோசனைக்கூட்டம், முத்தாய்ப்பாக கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, 10,100 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள், கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கும் விழா என பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை தரும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு நாளை (18.07.2023 செவ்வாய்)காலை 9.00 மணியளவில் மாவட்ட எல்லையான கலசப்பாக்கம் தொகுதி, காஞ்சி ஊராட்சியில் எழுச்சியான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. எல்லையில் அளிக்கப்படும் வரவேற்பு நிகழ்ச்சியில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்களும், கழக தோழர்களும் ஆயிரக்கணக்கில் திரண்டு, எழுச்சியான வரவேற்பு அளித்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் அறிக்கையில் கூறியுள்ளார்.

### ஐரோப்பிய ஒன்றியம் விவாதிக்கிறது - ஆனால்

# மணிப்பூர் பற்றி இதுவரை மோடி வாய் திறக்கவில்லை!

## ராகுல்காந்தி 'ட்விட்டர்' பதிவில் குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 17

மணிப்பூரில் இரு சமூகத்தினரிடையே ஏற்பட்ட மோதல் கலவரமாக மாறியது. மே மாதம் தொடங்கி தற்போது வரை அங்கு தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் அரங்கேறி வருகின்றன. 100க்கும் மேற்பட்டோர் கலவரத்தில் பலியானார்கள். ஆயிரக்கணக்கான வீடுகள், வழிபாட்டு தலங்கள் தீக்கிரையாகின.

ராணுவம், அசாம் ரைபிள் படையினர், போலீசார் குவிக்கப்பட்டு பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். எனினும் அவ்வப்போது துப்பாக்கி சூடு, தீ வைப்பு சம்பவங்கள் நிகழ்ந்து வருகின்றது. இன்னும் மாநிலத்தில் அமைதி திரும்பவில்லை.

இந்நிலையில் மணிப்பூர் விவகாரத்தில் பிரதமர் மோடி தலையிட வேண்டும் என்று பல்வேறு அரசியல் கட்சிகளும் வலியுறுத்தி வருகின்றன. எனினும் பிரதமர் மோடி மணிப்பூர் கலவரம் குறித்து எந்த கருத்தையும் குறிப்பிடவில்லை.

இது குறித்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது டிவிட்டர் பதிவில்,"மணிப்பூர் பற்றி எரிகிறது. ஐரோப்பிய ஒன்றியம் இந்திய நாட்டின் உள்விவகாரம் குறித்து விவாதிக்கிறது. ஆனால் பிரதமர் மோடி இது குறித்து வாய்திறக்கவில்லை. ரபேல் போர் விமான ஒப்பந்தத்திற்கு பரிசாக பிரான்சில் பாஸ்டில் தின விழாவிற்கு பிரதமர் மோடிக்கு அழைப்பு வந்துள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

### பஞ்சு இறக்குமதிக்கு 11% ஜி.எஸ்.டி.

# ஒன்றிய அரசு பிடிவாதப் போக்கால் மூடுவிழாவை நோக்கி ஜவுளித்தொழில்!

## 'சைமா' குற்றச்சாட்டு!

கோவை, ஜூலை 17-

ஒன்றிய அரசின் பிடிவாத போக்கால் மூடுவிழாவை நோக்கி ஜவுளித் தொழில் நகர்ந்து வருவதாக சைமா, குற்றச்சாட்டி உள்ளது.

தென்னிந்திய மில்கள் சங்க (சைமா) தலைவர் ரவி ஷாம், பொதுச்செயலாளர் செல்வராஜ், அகில இந்திய ஜவுளி கூட்டமைப்பு தலைவர் ராஜ்குமார் ஆகியோர் கோவையில் நேற்று நிருபர்களிடம் கூறியதாவது :-

தமிழ்நாட்டின் முதுகெலும்பாக ஜவுளித்தொழில் உள்ளது. அகில இந்திய அளவில் ஒப்பிடும்போது தமிழ்நாட்டில் மட்டுமே 40 சதவீதம் ஜவுளித்தொழில் உள்ளது. பாரம்பரியமான இந்த ஜவுளித்தொழில் தற்போது படுவேகமாக சரிவு நிலையை சந்தித்து வருகிறது. டெக்ஸ்டைல் மில்களுக்கு தேவையான முக்கிய மூலப்பொருள், பஞ்சு. இதன் விலை அபரிமிதமாக உயர்ந்துவிட்டது. சர்வதேச அளவில் ஒப்பிடும்போது, இந்திய பஞ்சு விலை, ஒரு பேல்க்கு 2 ஆயிரம் அதிகமாக உள்ளது. உள்நாட்டில் போதிய அளவில் உற்பத்தி இல்லாத காரணத்தாலும், தரம் குறைவாக இருப்பதாலும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. இப்படி இறக்குமதி செய்து, தயாரிக்கும் நூல்களை விற்க முடியாமல் தேக்க நிலை ஏற்பட்டுள்ளது. இது, பஞ்சாலைகளுக்கு பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

குறிப்பாக, பருத்தி விலைக்கும், நூல் விலைக்கும் சம்பந்தம் இல்லாமல் உள்ளது. இத்தொழிலில் ஏற்பட்டுள்ள தொடர் நசிவு காரணமாக, பல பஞ்சாலைகள் அடிமட்ட நிலைக்கு தள்ளப்பட்டு விட்டன. பஞ்சு மீதான இறக்குமதி வரி 11 சதவீதம் என்பது, இத்தொழிலுக்கு பெரும் நெருக்கடியை உருவாக்குகிறது. இவ்வளவு வரி செலுத்தி, பஞ்சு இறக்குமதி செய்வது என்பது இயலாத காரியமாக உள்ளது.

எனவே, இறக்குமதி வரியை ரத்து செய்ய வேண்டும் என ஒன்றிய அரசிடம் பலமுறை வலியுறுத்தி உள்ளோம். ஆனால், ஒன்றிய அரசு கண்டுகொள்ளவில்லை. உக்ரைன் - ரஷ்யா போர் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் வர்த்தக நிலை மந்தமாக உள்ளது. இதனால், ஜவுளிப்பொருட்களின் ஆர்டர் பெருமளவு குறைந்துவிட்டது. குறிப்பாக, திருப்பூருக்கு வரும் ஆர்டர்களில், கடந்த ஆண்டைவிட இந்த ஆண்டு 50 சதவீதம் குறைந்துவிட்டது. ஜவுளி ஏற்றுமதியும் பெருமளவு சரிந்துவிட்டது.

முன்பெல்லாம் 1000 கன்டெய்னர்களில் ஜவுளி ஏற்றுமதி நடக்கும். ஆனால், தற்போது 200 கன்டெய்னர்கள் கூட செல்வதில்லை. ஒட்டுமொத்தமாக, இந்திய அளவில் ஜவுளி ஏற்றுமதி இந்த ஆண்டு 23 சதவீதம் குறைந்துவிட்டது.

இது, கடினமான காலமாக உள்ளது. 3 லட்சம் பேல்களை மட்டும் வரியில்லாமல் இறக்குமதி செய்ய ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளது. இதை, 10 லட்சமாக உயர்த்தி தர வேண்டும் என கோரிக்கை விடுத்து வருகிறோம். இதையும் ஒன்றிய அரசு கண்டுகொள்ளவில்லை. வங்கிக்கடன் காலம் மேலும் 2 ஆண்டு நீட்டிப்பு செய்து தர வேண்டும் என வலியுறுத்தி உள்ளோம். இதையும் கண்டுகொள்ளவில்லை. இதுபோன்ற பல்வேறு காரணங்களினால் ஜவுளித்தொழிலில் தற்போது அசாதாரண சூழல் நிலவுகிறது. பல மில்கள் எப்போது வேண்டுமானாலும் மூடப்படலாம் என்ற நிலை உள்ளது.

எனவே, ஜவுளித் தொழில் சீரடைய வேண்டுமென்றால், ஒன்றிய அரசு, பருத்தி மீதான இறக்குமதி வரி 11 சதவீதத்தை அடியோடு ரத்து செய்ய வேண்டும். வங்கிக்கடன் காலத்தை, மேலும் 2 ஆண்டு காலம் நீடித்து தர வேண்டும். "இ.சி.ஜி.எல்.எஸ்" என்ற வங்கிக்கடன் விதிகளையும் மேலும் 2 ஆண்டுகாலம் நீட்டித்து தர வேண்டும்.

இதுதொடர்பாக இந்திய வங்கிகள் சங்கத்துக்கும் கடிதம் எழுதியுள்ளோம். மாநில அரசும் மின்கட்டணத்தில் சில சலுகை அறிவித்தால், இத்தொழில் மீண்டு வர உதவிகரமாக இருக்கும். குறிப்பாக, "பீக் ஹவர்" கட்டணத்தில் விலக்கு அளிக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### குடிசை மேம்பாட்டுத் திட்டம்

# அதானி நிறுவனத்திடம் தாராவி ஒப்படைப்பு!

## மகாராஷ்டிரா அரசின் செயலால் தமிழர்கள் அச்சம்!

மும்பை, ஜூலை 17-

தாராவி குடிசை மேம்பாட்டு திட்ட ஒப்பந்தத்திற்கு அதானி நிறுவனத்திற்கு மகாராஷ்டிரா அரசு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டின் வணிக தலைநகரான மும்பையில் சுமார் 600 ஏக்கர் நிலப்பரப்பில் ஆசியாவிலேயே அதிக குடிசைகளை கொண்ட பகுதியாக அறியப்படும் தாராவி உள்ளது. இங்குள்ள குடிசைகளை மேம்படுத்தும் திட்டத்தை செயல்படுத்துவதற்காக பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றது. 259 ஹெக்டேர் பரப்பு கொண்ட தாராவி குடிசை மேம்பாட்டு திட்டமானது ரூ.20ஆயிரம் கோடி மதிப்பீட்டிலான இந்த திட்டத்துக்கு அதானி நிறுவனம் ரூ.5069கோடியை முதலீடு செய்கிறது. இந்த திட்டப்பணிகளை தொடங்குவதற்கு அதானி குழுமத்துக்கு அரசு இறுதி ஒப்புதல் அளித்துள்ளது. இந்த திட்டத்தால் உள்ளூர் வணிகங்களை நம்பியுள்ள ஏழை மக்கள் பாதிக்கப்படுவார்கள் என அச்சம் எழுந்துள்ளது.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில்,

"தாராவி மறுசீரமைப்பு திட்டத்துக்கு அரசு கிரீன் சிக்னல் கொடுத்துள்ளதை அறிந்து அதிர்ச்சி அடைந்தோம். வாடகை பணத்தை கொண்டு அவர்கள் குடும்பத்தை நடத்தி வருகின்றனர். இவை இடிக்கப்பட்டால் உரிமையாளருக்கு மட்டும் ஒரு பிளாட் மட்டுமே ஒதுக்கப்படும். அவர்கள் என்ன செய்வார்கள்? அது அவர்களுக்கு போதுமானதாக இருக்காது. இந்த பகுதியில் கடந்த 2008 ஆம் ஆண்டு கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. உண்மையிலேயே அரசு தாராவியை மறுசீரமைக்க விரும்பினால், புதிதாக கணக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். கணக்கெடுப்பின் கடைசி நாள் தேதியானது தகுதிக்கான தேதியாக இருக்க வேண்டும். 2000த்துக்கும் மேற்பட்டோர் இங்கு இட்லி விற்பனை செய்கிறார்கள்.

முழு நகரத்திற்கும் உணவு வழங்குகிறார்கள். மறுசீரமைப்புக்கு பின் இது போன்ற வணிகங்கள் இருக்காது. தோல் மற்றும் கவரிங் நகை தயாரிப்பில் ஈடுபட்டுள்ள சிறு தொழில்கள் முடங்கும்" என தெரிவித்துள்ளனர். தாராவிக்கும், தமிழர்களுக்கும் கிட்டத்தட்ட 100 ஆண்டுகளுக்கு மேலான பந்தம் உள்ளது. தென் தமிழகத்தில் இருந்து தமிழர்கள் இங்கு புலம்பெயர்ந்தனர். இங்குள்ள மக்கள் தொகையில் பெரும்பாலான மக்கள் தமிழர்கள். எனவே அதானி நிறுவனம் பணிகளை தொடங்கும் போது பெரும்பாலும் தமிழ்நாட்டு மக்கள் தான் பாதிக்கப்படுவார்கள். அவர்கள் இடம்பெயர வேண்டிய கட்டாய சூழல் ஏற்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

**அதானிக்கு மகாராஷ்டிரா அரசின் பரிசு!**

காங்கிரஸ் பொது செயலாளர் ஜெய்ராம் ரமேஷ் கூறுகையில், "பிரதமர் மோடி மாநில அரசுகளை எப்படி தங்களது கூட்டாளிகளுக்கு ஏடிஎம் இயந்திரமாக மாற்றியுள்ளார் என்பதற்கான மற்றொரு எடுத்துக்காட்டு இது. பிரதமர் மோடியின் கூட்டாளிக்கு மகாராஷ்டிரா அரசு வழங்கும் பரிசு தான் தாராவி திட்டம். மும்பையின் குடிசைவாசிகளின் நிலமும், வாழ்வாதாரமும் கூட மோதானியின் மெகா ஊழலால் விட்டுவைக்கப்படவில்லை" என்றார்.

### மதுரவாயல் வடக்கு 92-வது வட்டத்தில்- எஸ்.எம்.ஜெயரத்தினம் தலைமையில்

# கலைஞர் நூற்றாண்டு விழா! 2 நாள் கிரிக்கெட் போட்டி!

## நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் - கணபதி எம்.எல்.ஏ. பரிசுகள் வழங்கினார்!

சென்னை, ஜூலை.17-

சென்னை தெற்கு மாவட்டம் மதுரவாயல் வடக்கு பகுதி முகப்பேர் 92 வது வட்ட சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் வகையில் இரண்டு நாள் கிரிக்கெட் போட்டி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு வட்ட செயலாளர் எம்.எம். ஜெயரத்தினம் தலைமையில் மதுரவாயல் வடக்கு பகுதி செயலாளரும் 11 வது மண்டலகுழு தலைவர் நொளம்பூர் வே.ராஜன் முன்னிலையில் மதுரவாயல் வடக்கு பகுதி பகுதி துணை செயலாளர் எம்.ஏ.செந்தில்சுரேஷ், மாவட்ட பிரதிநிதி எம்.சி. எழிலரசு, பகுதி பிரதிநிதி எம்.எஸ்.ஜெயசிம்மன் பகுதி அமைப்பாளர்கள் எம்.பி.நவராஜ், எம்.என்.ராஜ்கமல் வட்ட அவைத் தலைவர் எம்.எஸ். சந்தானம் ஆகியோர் வரவேற்பு ஆற்ற மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் க.கணபதி வெற்றி கோப்பையை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் விருகம்பாக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா தலைமை செயற்குழு உறுப்பினர் ஆலப்பாக்கம் கு.சண்முகம், பகுதி கழக நிர்வாகிகள் ஆ.மாலினி, தீ.பாலாஜி, எம். உதயகுமார், வட்ட செயலாளர்கள் எம்.கே.பி.அண்ணாதாசன், எஸ்.ஜி.மாதவன், ப. ஆலன், சி.சசிகுமார், எம்.இ. ஸ்டாலின், எம்.ரூபன், ரமணி மாதவன் மற்றும் எம்.பி.நவகுமார், ஏ.சுந்திரி, ஏ.ஜி.வேலன், எம்.எஸ்.பிரபா, தமிழன்பன், டி.கலைநேசன், எம்.சி. இளங்கோவன், எம்.பி.சீனிவாசன், டி.ஜெயச்சந்திரன், எஸ்.தமிழ்அழகன், எஸ். ஜமுனா, பி.மாற்கு, ஏ.மதி. எஸ்ராகுல், வட்ட நிர்வாகிகள் எஸ்.பாலாஜி, எம். ஜி.சுரேஷ், டி.புகழேந்தி, பி. நாகராஜ், கே.முருகன், எம். எம்.கண்ணப்பன், ஜி.நாகராஜ், எல்.கிருஷ்ணமூர்த்தி, சி.காமராஜ், ஆர்.மகேந்திரன், டி.அமுல்ராஜ், சி.விமல்தாஸ், கே.பிரகாஷ், எம்.புகழேந்தி, எம்.சபரிதாஸ், எஸ்.வேலன், என்.மல்லியப்பன், வளர்மதி, வில்சன், எஸ்.லட்சுமணன், பி.நவசுந்தர், டி.ராஜி, வி.திருமுருகன், வி.கலைவாணன், பி.ஜெயக்குமார், எம்.மணிகண்டன், எஸ்.சரவணன் டி. ஆல்பர்ட், டி.நிக்ஸன், கே. மேகநாதன், கே.தயாநிதி, பி. எழிலரசு, எஸ்.சபரி, ஆர். ராஜேஷ், ஆர்.தமிழ், எம். மகிமை, எம்.இமயவர்மன், பி.உதயநிதிவேலன், எம்.காந்தமலின், டி.சரன், சி.சித்தார்த் மற்றும் இளைஞர் அணி எம். கே.நரேஷ், எம்.எஸ்.கார்த்திக், எம்.ஜி.விக்னேஷ், எம். சக்திவேல், சுதர்சன் உள்ளிட்ட கழக செயல் வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி புதிய நிர்வாகிகள் மற்றும் ஆலோசனை கூட்டம் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் எஸ்.எம். ஜியாவுதீன் வரவேற்பில் நடைபெற்றது. கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் க. சுந்தர் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். உடன் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் ஜெ. யோகானந்த், எம்.வி. இளம்பரிதி, எஸ்.அரவிந்தகுமார், ஏ. மூர்த்தி, எம்.வசந்த ராஜ், பி. விஜயலட்சுமி உள்ளிட்ட மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

### டெல்லியில் ஏற்பட்ட வரலாறு காணாத

# வெள்ளப் பாதிப்புக்கு பா.ஜ.க. சதியே காரணம்!

## ஆம் ஆத்மி கட்சி குற்றச்சாட்டு!

புதுடெல்லி, ஜூலை 17 -

தில்லியில் ஏற்பட்ட வெள்ளத்திற்கு பா.ஜ.க. தீட்டிய சதியே காரணம் என்று ஆம் ஆத்மி கட்சியின் மூத்த தலைவரும், மாநிலங்களவை உறுப்பினருமான சஞ்சய் சிங் குற்றம் சாட்டியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

டெல்லியில் கடந்த 3 நாள்களாக மழை பெய்யவில்லை. பிறகு வெள்ளம் ஏற்படுவதற்குக் காரணம் என்ன?. பா.ஜ.க. தீட்டிய ஆழமான சதியால் தான் நகரத்தில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பிரதமர் நரேந்திர மோடியின் மனதில் மறைந்திருக்கும் வெறுப்பு, இப்படிப்பட்ட சம்பவங்களில் வெளி வருகிறது. ஹரியானா மாநிலம் ஹத்னிகுண்ட் தடுப்பணையில் இருந்து ஹரியானா, உத்தரப் பிரதேசம், டெல்லி ஆகிய மூன்று வழிகளில் தண்ணீர் செல்கிறது. ஆனால், ஹத்னிகுண்ட் தடுப்பணையிலிருந்து வெளியேற்றப்பட்ட அனைத்து தண்ணீரும் கடந்த ஜூலை 9 முதல் 13 வரை தில்லியை நோக்கி மட்டுமே திறந்து விடப்பட்டது. இந்தத் தண்ணீர் ஒரு வேளை சீராக திறந்து விடப்பட்டிருந்தால், தற்போது டெல்லியில் வெள்ளம் ஏற்பட்டிருக்காது.

ஹத்னிகுண்டின் மேற்கு கிழக்கு கால்வாயில் கடந்த 9ஆம் தேதி எவ்வளவு தண்ணீர் திறக்கப்பட்டது என்று ஹரியானா மாநில முதல்வரிடம் கேட்டாலே அனைத்தும் வெளிச்சத்திற்கு வந்துவிடும். பா.ஜ.க. ஏன் இப்படி செய்கிறது?. டெல்லியில் உள்ள 7 மக்களவைத் தொகுதிகளிலும் பா.ஜ.க. எம்.பி.க்களே உள்ளனர்.

இந்நிலையில், டெல்லியின் வழியே தண்ணீர் திறந்து விடக்கூடாது என்று அந்த 7 மக்களவைத் தொகுதி உறுப்பினர்களும் பிரதமர் மோடியிடம் முறையிட்டிருந்தால் நன்றாக இருந்திருக்கும். 5 மாநிலங்களை வெள்ளத்தில் மூழ்கடித்து விட்டு பிரதமர் நரேந்திர மோடி பிரான்ஸ் நாட்டுக்கு பயணம் மேற்கொண்டுள்ளார். ஆனால், பா.ஜ.க.வினர் மக்களின் உணர்வில் அரசியல் செய்து வருகின்றனர்.

டெல்லியில் வெள்ளம் ஏற்பட்டுள்ள நிலையில், முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் தனது அமைச்சர்களுடன் களத்தில் இருக்கிறார். ஆனால், உத்தரப் பிரதேசம், ஹரியானா மாநிலங்களின் முதல்வர்கள், மக்களுடன் இருக்கும் படத்தை பார்க்க முடியவில்லை.

இவ்வாறு சஞ்சய் சிங் கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்துள்ள ஹரியானா முதல்வரின் நீர்ப்பாசனத்திற்கான ஆலோசகர் தேவேந்திர சிங், "ஹத்னிகுண்ட் தடுப்பணையில் ஒரு லட்சத்திற்கும் அதிக கனஅடி தண்ணீர் வரும்போது, பெரிய பாறைகள் காரணமாக மேற்கு யமுனை மற்றும் கிழக்கு யமுனை கால்வாயில் தண்ணீரை வெளியேற்ற முடியாது" என தெரிவித்துள்ளார்.